வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 16.05.2024 வியாழக்கிழமை இதழ் : 137 பக்கங்கள் : 12

# தமிழ்த் தேசிய துக்கநாளாக மே 18ஐ கடைப்பிடிப்போம்!

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு


திருகோணமலை, மே 16

**தமிழ் மக்கள் மிகக்கொடூரமாக கொன்று அழிக்கப்பட்டு 15ஆண்டுகள் நிறைவுறுகின்ற வலி சுமந்த நாட்களை நினைவுகூருகின்ற இந்தத் தருணத்தில் தமிழராகிய எம் ஒட்டுமொத்த ஆன்மாவையும் பாதித்த மே 18ஐ தமிழ்த் தேசிய துக்க நாளாக கடைப்பிடிப்போம் - என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தமிழ் மக்கள் மிக கொடூரமாக கொன்று அழிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவுறுகின்ற வலி சுமந்த நாட்களை நினைவு கூரு கின்ற இந்த தருணத்தில் தமிழரா கிய எம் ஒட்டுமொத்த ஆன் மாவையும் பாதித்த மே 18ஐ தமிழ் தேசிய துக்க நாளாக

11



## யாழ். வந்தார் அமெ.தூதுவர்

யாழ்ப்பாணம், மே. 16

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்தார்.

வட மாகாணத்தில் உள்ள இலங்கையர்களுக்கான தொடர்ச்சியான அமெரிக்க ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கான வழிகளை ஆராய்வதற்காக சிவில் சமூகம், இளைஞர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட கண்ணோட்டங்களைக் கேட்பதற்காக இந்த வாரம்

11

## இந்தியாவுடன் இணைந்து ஆயுதத் தொழிற்சாலை!

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

கொழும்பு, மே 16

சிறிய ரக ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைப்பது குறித்து இந்தியாவுடன் பேச்சுகளை நடத்துகிறோம் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம், இந்தியாவின் பாதுகாப்பு தொழில்துறை ஆகியவை இணைந்த இந்தக் கூட்டு முயற்சி குறித்து இலங்கை அரசாங்கம் பேச்சில் ஈடுபட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் இலங்கை இராணுவத்துக்கு நிபுணத்துவம் உள்ளது. உற்பத்தி தொழில்துறை குறித்து கவனம் செலுத்தவேண்டும். நாங்கள் ஏற்கனவே ஆயுதங்களை உற்பத்தி

11

## உண்மை மற்றும் நல்லிணக்க திட்டம் இலங்கைக்கு மிகவும் அவசியமானது!

### அமெ. உதவி இராஜாங்க செயலர் வலியுறுத்து



கொழும்பு, மே. 16

இலங்கையில் செயற்படும் உண்மை மற்றும் நல்லிணக்கத் திட்டமொன்று காணப்படுவது அவசியம் என தெரிவித்துள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு, எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெறும் தலைவர்கள் இதனை முன்னெடுப்பார்கள் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் தற்போதைய கடன்

11

## விஞ்ஞான பரீட்சைக்கு 2 புள்ளிகள்!

கொழும்பு, 16

க. பொ. த. சாதாரண தர பரீட்சையின் விஞ்ஞான பாட வினாத்தாளுக்கு 2 புள்ளிகள் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் வழங்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

11

## பாலியாறு தண்ணீர் திட்டம்; அடிக்கல் நாட்டினார் ஜீவன்



கொழும்பு, மே 16

வடக்கு மாகாண மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள பாலியாறு தண்ணீர் வழங்கல் திட்டத்துக்கு நேற்று புதன்கிழமை அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

116 பில்லியன் (11 ஆயிரத்து 600 கோடி) ரூபாய் செலவில் அமையும் இந்தத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று மன்னார் - வெள்ளாங்குளத்தில் நடைபெற்றது.

11

## இராணுவத்தினருக்கு காணிகள் நடவடிக்கையை விரைவாக்க குழு

கொழும்பு, மே 16

இராணுவத்தினருக்கு காணி வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், காணி ஆணையாளர் நாயகம், இராணுவ சேவை அதிகார சபையின் தலைவர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரி ஒருவரும் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சேவையிலுள்ள, ஓய்வு பெற்ற,

11

## போதை மருந்து கொடுத்து சிறுமி கூட்டு வன்புணர்வு

### பெண் உட்பட நால்வருக்கு மறியல்

வவுனியா, மே 16

வவுனியாவில் 15 வயது சிறுமிக்கு போதை மருந்து கொடுத்த கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் பெண் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுமியின் பெற்றோர் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து பொலிஸார் நடத்திய விசாரணையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருபவை

11

## இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 சட்டங்கள் நிறைவேற்றம்!

### ஜனாதிபதி ரணில் பெருமிதம்

கண்டி, மே 16

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. தெற்காசியாவில் புதிய சட்டங்களை செயல்படுத்தும் நாடாக இலங்கை மாறியுள்ளது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமையுடன் தெரிவித்தார்.

அத்துடன், புதிய அரசியல் கலாசாரத்தை நாட்டில் உருவாக்கி வருவதாகவும் ஜனாதிபதி கூறினார். அத்துடன், அரசாங்கம் திருடர்களை பாதுகாப்பதாக சிலர் குற்றம் சுமத்தினாலும் தற்போதைய அரசாங்கம் திருடர் களைப் பிடிப்பதற்காக சட்டங்களைக்

11

## 26ஆம் திகதி பிரசாரத்தை ஆரம்பிக்கின்றது பெரமுன!

கொழும்பு, மே 16

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனது கட்சியைப் புனரமைப்பதற்கான பிரசாரத்தை எதிர்வரும் 26ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

அநுராதபுரம் - கலாவாவி தேர்தல் தொகுதியில் ஆரம்பிக்கப்படும் இந்த பிரசாரத்தைத் தொடர்ந்து தொகுதி மட்டத்திலான பிரசாரங்களை தொடங்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதனிடையே, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மைய நாட்களில் கடந்த திங்கட்கிழமை

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை எப்படியும் நிறைவேற்றி விடவேண்டும் என்று பெரும்பாலான சிவில் அமைப்புகளும் சமூகத்திலுள்ள முக்கிய புத்திஜீவிகள் சிலரும் பொது அமைப்புகள் சிலவும் தீவிரமாக முயன்றுகொண்டிருக்க, ஒரு சில அரசியல் கட்சிகளும் அதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றன.

அதனை முளையிலேயே கிள்ளி விடுவதற்கு சிலர் அதிதீவிர முயற்சி எடுத்தபோதிலும் அது சாத்தியமாகாமல் போகவே தமக்குத் தெரிந்த தான- தண்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்கள், "அவரை" வெல்ல வைப்பதற்காகத்தான் அதில் முன்னணியில் நிற்கின்றனர் என்பவர்கள் - அதற்காக அவர்கள் "டீல்" போட்டுவிட்டார்கள் என்பவர்கள் - அதனை மூர்க்கத்தனமாக எதிர்ப்பவர்கள் யாருடன் டீல் போட்டார்கள் என்பதை இதுவரை யாரும் கேள்விக்கு உட்படுத்தவில்லை.

ஒருவர் எதிர்க்கிறார் என்பதற்காகத் தாமும் எதிர்த்தால் அவரின் "கடைக்கண்" பார்வை தம்மீது விழும் என்பதற்காக எதிர்ப்பவர்களும் - ஒருவர் பச்சை நிறத்தை சிவப்பு என்றால், அவர் சொல்கிறார் என்பதற்காக அது பச்சை என்று தெரிந்துகொண்டே தாமும் அதனை சிவப்பு என்று சொல்கின்றவர்களும் அதனை எதிர்ப்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

அதுவல்ல நாம் இன்று சொல்லவருவது,

இந்த முயற்சியை ஆரம்பம் முதலே எதிர்த்து வருபவர் தமிழ் அரசின் யாழ்ப்பாண மாவட்ட எம். பி. சுமந்திரன் என்பது தெரிந்தது தான்.

அவரோ, இந்தப் பொதுவேட்பாளராக தன்னைப் போட்டியிடுமாறு ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்டார் என்பதும். அவர் பொய் சொல்கிறார் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் மறுத்திருப்பதும் பலரையும் புருவத்தை உயர்த்த வைத்திருக்கின்றது.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை இந்த விடயத்தை முதன்முதலில் பொதுவெளியில் பேசத் தொடங்கியவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்தான். அதனால், அவர் தன்னை வேட்பாளராகப் போட்டியிடுமாறு கேட்டார் என்பது இதுவரை அதனை எதிர்த்து வந்தபோது தெரிவித்த கருத்துகளுக்கும் இதற்கும் பலத்த வித்தியாசம் உண்டு. அதனை எதிர்க்கின்றபோது அதற்கான காரணங்களைச் சொன்ன சுமந்திரன், இப்போது தன்னைப் போட்டியிடக் கேட்டார் என்பது அந்த விடயத்தை ஒரு நகைச்சுவை விடயமாக்குவதற்கான முயற்சியோ என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

இதுவரை பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குகின்ற விடயத்தில் ஒரு பொது உடன்பாட்டுக்கு அரசியல் கட்சிகள் வந்துவிடவில்லை. அதைவிட, எந்தக் கோரிக்கையை முன்வைப்பது என்பது குறித்தும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வரவில்லை. இந்த இலட்சணத்தில் யாரை வேட்பாளராக்குவது என்பது பற்றி சிந்திக்கின்ற அளவுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் சிந்தித்திருப்பார் என்று இந்த ஊர்க்குருவி நம்பவில்லை.

தமிழ் அரசு கட்சியே இன்னமும் அதற்கு உத்தியோகபூர்வமாக தனது முடிவைச் சொல்லவில்லை. அப்படியிருக்கையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை - அதுவும் இந்த விடயத்தில் ஆரம்பம் முதலே எதிர்த்துவரும் ஒருவரை நீங்களே போட்டியிடுங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் இருப்பார் என்றும் நம்புவதற்கில்லை.

தான் அப்படிக் கேட்கவில்லை. சுமந்திரன் பொய் சொல்கிறார் என்று சுரேஷ் கூறிய பின்னர், இதுவரை - அதாவது இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும்வரை சுமந்திரன் எங்கும் பொதுவெளியில் அதனை மறுத்ததாகவும் தெரியவில்லை. இதுவரை அதனை பகிரங்கமாக எதிர்த்துவந்த ஒருவர் இப்போது இவ்வாறு தெரிவித்திருப்பது எதற்காக என்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை.

தமிழ் அரசு கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் பிரசாரத்தின்போது ஒரு வேட்பாளர், அமெரிக்கா தான் தலைவராக வருவதையே விரும்புகின்றது என்றும் தான் தலைவராக வந்தால், அமெரிக்கா எமது பிரச்னையை தீர்த்துவைக்க உதவும் எனவும் பிரசாரம் செய்ததுபோல இப்போது சிலர் - சில இராஜதந்திரிகளை தமக்கு பக்கத்துணைக்கு அழைக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அப்படி பொதுவேட்பாளர் ஒருவரை நீங்கள் நிறுத்தினால் - அந்தக் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவு வழங்காமல் அவர் கணிசமான வாக்குகளை பெறாமல் விட்டுவிட்டால், நாங்கள் உங்களுக்கு உதவ முடியாமல்போய்விடும் என்று சில இராஜதந்திரிகள் நமது தலைவர் ஒருவரிடம் நேரடியாக தெரிவித்தனர் என்று சிலர் எழுதி வருகின்றனர்.

முதலில், இராஜதந்திரிகள் இவ்வாறு நேரடியாக சொல்வார்களா என்பது இராஜதந்திரிகளுடன் பழகுகின்றவர்களுக்கு தெரியும். அப்படியும் இல்லாமல் அவர்கள் அப்படி சொல்லியிருந்தாலும் கூட நமது கோரிக்கை நிச்சயம் சமஷ்டிக்கு குறைவானதாக இருக்கப் போவதில்லையே. எந்த இராஜதந்திரிதான் நமது சமஷ்டி கோரிக்கைக்கு இதுவரை ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்? இதுவரை எமது நியாயமான கோரிக்கை எதற்காகவும் குரல்கொடுக்காதவர்கள் இப்போது மக்கள் வாக்களிக்காமல் விட்டால் தாங்கள் உதவப்போவதில்லை என்று சொல்கிறார்கள் என்பது தமிழ் அரசு தலைவர் பதவிக்காக போட்டியிட்டவர் கூறிய கதை போன்றதுதான்.!

கேவலம் இந்தப் பதின்மூன்றைக் கூட முழுமையாக அமுல்படுத்தச் சொல்லி இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கமுடியாத இராஜதந்திரிகள் சமஷ்டிக்குக் குறையாத கோரிக்கை ஒன்றுக்காக, தமிழ் மக்கள் ஆதரிக்காமல் விட்டால் தாங்கள் உதவமாட்டார்களாம்.

எப்படி எப்படியெல்லாம் செய்து- சொல்லி- இந்தப் பொதுவேட்பாளர் போட்டியிடுவதை தடுக்கலாம் என்று சிந்திக்கின்றவர்கள், எப்படி தமிழ் மக்களை வாக்களிக்கப் பண்ணலாம் என்று சிந்தித்தால் அதுவே வெற்றியை நோக்கி நகர்த்தும்.!

-ஊர்க்குருவி

## மல்லாவியில் நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்துக்கு அடிக்கல் நாட்டல்



மல்லாவி, மே 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை மற்றும் துணுக்காய் பகுதி மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் நோக்குடன், மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்துக்கான நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்துக்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

நிலத்தடி நீரினால் மாந்தை மற்றும் துணுக்காய் பகுதிகளில் மூன்று வீதமான மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிறுநீரகப் பாதிப்புக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனிக்குளம் நீர்த்தேக்கத்திலிருந்து நீரைப் பெறுகின்ற கரும்புள்ளியான் குளத்திலிருந்து, புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மேற்பரப்பு நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு நீர் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

உலக வங்கியின் 1856 மில்லியன் ரூபாய் நிதி அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்துக்கான நிர்மாணப்பணிகளை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 35 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் 6,968 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நன்மையடையவுள்ளனர். (எ)

## ரஷ்ய - உக்ரைன் மோதலில் 16 இலங்கை படையினர் பலி!

கொழும்பு, மே. 16

ரஷ்ய - உக்ரைன் மோதலில் இலங்கையின் ஓய்வு பெற்ற 16 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது ரஷ்யா மற்றும் உக்ரைனில் உள்ள ஓய்வு பெற்ற இராணுவத்தினரை வெளிவிவகார அமைச்சின் தலையீட்டுடன் நாட்டிற்கு அழைத்து வருவதற்கான திட்டம் தயாரிகணகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்திற்கு ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை அனுப்பிவைக்கும் ஆட்கடத்தல் தொடர்பில் இதுவரை 287 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் கூறினார். (அ)

## அத்தியாவசிய உணவுகளின் கட்டுப்பாட்டு விலை அறிவிப்பு

கொழும்பு, மே 16

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மதிப்பிடப்பட்ட சில்லறை விலை வரம்புகளை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

இதில் 11 வகையான பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்படி ஒரு கிலோ கோதுமை மா 179 முதல் 189 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ வெள்ளை சீனி 258 முதல் 275 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ பருப்பு 288 ரூபாயிலிருந்து 302 ரூபாய்க்கு இடைப்பட்ட விலையிலும் விற்கப்பட வேண்டும்.

இதேபோன்று, வெள்ளை முட்டை 41 ரூபாவிலிருந்து 43 ரூபாய் வரையிலும் சிவப்பு முட்டை ஒன்று 45 ரூபாவிலிருந்து 47 ரூபாய் வரையிலும் விற்கப்பட வேண்டும் என்றும் நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. (ஐ)

## அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம் அமைக்க ரூ. 25 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, மே 16

கல்முனையில் அஷ்ரப் ஞாபகார்த்த அருங்காட்சியகத்தின் நிர்மாணப் பணிகளைத் துரிதமாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

இந்நாட்டில் முஸ்லிம் மக்களுக்காக அளப்பரிய சேவைகளையாற்றிய தலைசிறந்த அரசியல்வாதியான சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் ஆற்றிய சேவைகளை கௌரவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக "அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம்" ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எம். எச். எம். அஷ்ரப்பின் 24ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க அஷ்ரப்பின் பிறந்த ஊரான கல்முனையில் இந்த நினைவு அருங்காட்சியகம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

திறமையான சட்டத்தரணியும் சிறந்த சட்டமியற்றுபவருமான மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் புகழ்பெற்ற அரசியல்வாதி என்பதோடு அவர் முஸ்லிம் மக்களுக்காகப் பெரும் பணியாற்றியுள்ளார்.

முன்மாதிரியான மற்றும் மனிதாபிமானம் நிறைந்த மக்கள் பிரதிநிதியான அவர் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே மிகவும் மதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
16.05.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியலில் பொய்கள்

தமிழ்த் தேசிய அரசியல் சூழல் சதிக் கோட்பாடுகளுக்கு பிரபல்யமானது. இப்போது அதனோடு பொய்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது. உலகப் புகழ்பெற்ற சர்வதேச அரசியல் நிபுணர் ஜோன் மியர்ஷைமர் - "ஏன் தலைவர்கள் பொய் சொல்கின்றனர்" என்னும் தலைப்பில் ஒரு நூலை எழுதியிருக்கின்றார். அமெரிக்க - யூதரான மியர்ஷைமர் இன்றுள்ள உலகளவிலான அரசியல் அறிஞர்களில் முதன்மையானவராவார். அமெரிக்காவின் தலைவர்கள் காலத்துக்குக் காலம் எவ்வாறு பொய்களை கூறியிருக்கின்றனர் என்பதை பதிவு செய்திருக்கும் அவர், பொய்களை சுயநலம் சார்ந்ததாகவும் நாட்டின் நலனுக்கான பொய்களென்றும் வரையறுத்திருக்கின்றார்.

அதாவது, அரசியலில் பொய்கள் தவிர்க்க முடியாமல் போகும்போது ஓர் அரசியல் தலைவர் அதனை கைக்கொள்வது தவறல்ல. ஆனால், அந்தப் பொய்க்குப் பின்னால் மக்கள் நலன் இருக்க வேண்டும் - நாட்டின் எதிர்காலம் இருக்க வேண்டும். உதாரணமாக, பனிப்போர் கால கியூப ஏவுகணை நெருக்கடியின்போது அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி கென்னடி சோவியத் ஒன்றியத்தின் தலைவர் கொர்ப்சோவுடன் ஓர் இரகசிய உடன்பாட்டை செய்து கொள்கின்றார். இதனை மணந்து பிடித்துக் கொண்ட ஊடகமொன்று குறித்த உடன்பாடு பற்றி கேள்வியெழுப்பியபோது, கென்னடியோ அப்படியோர் உடன்பாடு இல்லை - என்றார். ஒரு ஜனாதிபதியாக அவர் அமெரிக்க மக்களுக்கு பொய் கூறினார். ஆனால், அந்தப் பொய்க்கு பின்னால் அமெரிக்க நலன் இருந்தது. எனவே, அந்த அரசியல் பொய்க்கு ஒரு பெறுமதியுண்டு.

தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் அதிக கவனத்தைப் பெற்றிருக்கின்றது. இதன் காரணமாகவே எதிர்ப்புக் கருத்துகளும் அதிகமாக எட்டிப்பார்க்கின்றன. ஆனால், அவைகள் எவையுமே தர்க்கரீதியில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை நிராகரிக்கும் ஆற்றல் கொண்டவையல்ல. மாறாக, பொய்களை கூறுவதன் ஊடாக விடயங்களை முன்வைப்பவர்களின் ஆத்மபலத்தை சிதைக்கும் நோக்கம் கொண்டவையாகவே இருக்கின்றன. இவற்றை நாம் மக்கள் விரோத பொய்கள் எனலாம். ஏனெனில், பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு எதிரான கருத்துகள் அனைத்துமே வெறும் சுயநலனுக்காகவும் - தங்களின் எஜமான விசுவாசத்துக்காகவும் கட்டப்படும் கதைகளாவே இருக்கின்றன.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி அதன் முடிவை எதிர்வரும் 19ஆம் திகதி அறிவிப்பதாகக் கூறியுள்ளது. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கடுமையாக எதிர்த்து வருகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்தில் தன்னை தமிழ் பொது வேட்பாளராக களமிறங்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்டாரென சுமந்திரன் பொது வெளியில் தெரிவித்திருக்கின்றார். அது உண்மையல்ல - பொய் என்று சுரேஷ் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தை எதிர்ப்பதற்கு அரசியல் பொய்களும் தேவைப்படுகின்றனவா என்னும் கேள்வியெழுகின்றது. ஆனால், பொது வேட்பாளர் விவகாரத்தை முன்னெடுத்துவரும் சிவில் சமூக அமைப்புகள் எவையுமே இதுவரையில் வேட்பாளர் தொடர்பில் பேசவில்லை. விடயங்கள் உரையாடல் நிலையிலேயே இருக்கின்றன. 19ஆம் திகதி, தமிழ் அரசு கட்சியின் தீர்மானத்தை உற்றுநோக்கிய பின்னர்தான் விடயங்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகரவுள்ளன என்று சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கூறுகின்றனர். இவ்வாறானதொரு நிலையில், வேட்பாளர் தொடர்பில் எதற்காக மல்லுக்கட்ட வேண்டும்? பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டுமென்று ஒரு கூற்றுண்டு.

## கிளிநொச்சி அபிவிருத்திக்குழு கூட்டத்தை புறக்கணித்தனர் அரச நிர்வாக சேவையினர்

கிளிநொச்சி, மே 16
கிளிநொச்சி அபிவிருத்திக் குழு கூட்டத்தை அரச நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் நேற்று புறக்கணித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று புதன்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் விவசாயம், கல்வி, சுகாதாரம், காணி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், அங்கஜன் இராமநாதன், மாவட்ட அரசாங்க அதிபர், திணைக்கள பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அரச நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்கவில்லை. (ஐ)

## நினைவேந்தல் உரிமையை அரசு பாதுகாக்க வேண்டும்

**விஜித ஹேரத் எம். பி.**



கொழும்பு, மே 16
போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு உறவினர்களுக்கும் தோழர்களுக்கும் உரிமை உண்டு. அவர்களின் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

பலஸ்தீனப் போர் தொடர்பான பாராளுமன்ற ஒத்திவைப்புவேளை விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் உள்நாட்டு போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் தோழர்களுக்கு போரில் இறந்தவர்களை நினைவுகூர உரிமை உண்டு. முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் விதமாக சம்பூரில் நினைவேந்தல் நடத்தியதற்காக 3 பெண்கள் மற்றும் ஓர் ஆண் கைது செய்யப்பட்டமைக்கும் அவர் தனது உரையில் கண்டனம் வெளியிட்டார்.

நக்பா சம்பவத்தில் இறந்தவர்களை நினைவுகூரும் நாளாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. இதேபோன்று உள்நாட்டு போரில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கு இலங்கையர்களுக்கும் உரிமை உண்டு. போரில் இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையானது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமை. இலங்கையிலும் அந்த உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## கொழும்பில் துப்பாக்கிகள் மீட்கப்பட்டன

கொழும்பு, மே 16
கொழும்பு - பிலியந்தலை பிரதேசத்தில் வீடொன்றில் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வீட்டில் ரி-56 ரக துப்பாக்கி, 116 ரக துப்பாக்கி மற்றும் 4 மகசின்கள், 90 ரி - 56 துப்பாக்கிகளின் தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 264 தொழு நோயாளர்கள் இந்த ஆண்டில் கண்டறிவு


கொழும்பு, மே 16
இந்த ஆண்டில் புதிய தொழுநோயாளிகள் 264 பேர் கண்டறியப்பட்டுள்ளனர் என்று தொழுநோய் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

இவர்களில் 24 பேர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என அதன் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் நிருபா பல்லேவத்த தெரிவித்துள்ளார்

அத்துடன் 2023 ஆம் ஆண்டில், தொழுநோயாளிகள் 1,580 பேரும். இவற்றில் பெரும்பாலானவர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 180 பேர் சிறுவர்களாவர். இதில், 12 வீதத்தினர் 15 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

நோயைப் பரப்பும் திறன் அவர்களிடம் இல்லை. அத்துடன் இந்த ஆண்டு, 8 வீதத்தினர் மாற்றுத்திறனாளி நோயாளிகள் என்றும் அவர் கூறினார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 16 வியாழக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 03
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.30
திதி : அட்டமி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கொடுக்கும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். தாய் வழியில் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் நன்மை உண்டு. அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும் நாள்.

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றில் தடை பெற வேண்டும்

## தமிழக அரசுக்கு ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, மே 16

ஒன்லைன் ரம்மிக்கு ஆதரவான சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றில் தடை பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். - இவ்வாறு பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசு இயற்றிய ஒன்லைன் சூதாட்டத் தடைச் சட்டம் ரம்மி, போக்கர் போன்ற விளையாட்டுகளுக்குப் பொருந்தாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததிலிருந்தே அத்தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றத்தில் தடை பெற வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்தி வருகிறேன். ஒவ்வொரு முறை ஒன்லைன் சூதாட்டத்துக்கு உயிர்கள் பலியாகும் போதும் அரசுக்கு நினைவூட்டி வருகிறேன்.

ஆனால், ஒன்லைன் ரம்மிக்கு அப்பாவி உயிர்கள் தொடர்ந்து பறிபோவதைத் தடுக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது. அரசின் சார்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், ஒன்லைன் சூதாட்ட மோகம் எப்போது ஒழியுமோ? என்று ஏங்கித் தவிப்பதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை.- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# “யானைகள் வழித்தட வரைவு அறிக்கையை அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும்”

சென்னை, மே 16

யானைகள் வழித்தட திட்ட வரைவு அறிக்கையை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

முறையான ஆய்வுகளை மேற்கொள்ளாமல் மலைவாழ் பகுதி மக்களை வெளியேற்றும் நோக்கத்தில் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கை கடும் கண்டனத்திற்குரியது. - இவ்வாறு

அ. ம. மு. க. பொதுச்செயலாளர் ரி. ரி. வி. தினகரன் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசின் வனத்துறையின் சிறப்புக்குழுவால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும் யானைகள் வழித்தட திட்ட வரைவு அறிக்கையின் மூலம் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், ஒவேலி, முதுமலை ஆகிய வனச்சரகங்களை ஒட்டிய சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

யானைகளின் வாழ்விடங்களை பாதுகாத்தல், நெருக்கடியான யானை வழித்தடங்களை அடையாளம் காணுதல், யானைகளுக்கான நீர் ஆதாரம் உள்ளிட்டவைகள் அத்தியாவசியமானது என்றாலும், முறையான ஆய்வுகளை மேற்கொள்ளாமல் மலைவாழ் பகுதி மக்களை வெளியேற்றும் நோக்கத்தில் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கை கடும் கண்டனத்திற்குரியது என்றும் தினகரன் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சவுக்கு சங்கர் பிணை மனு விசாரணை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கோவை, மே 16

பெண் பொலிஸாரை அவதூறாகப் பேசியதாக சவுக்கு யூ- ரியூப் சனலின் முதன்மை செயல் அதிகாரி சங்கர் கோவை சைபர் க்ரைம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அடுத்தடுத்து வந்த முறைப்பாடுகளையடுத்து தேனி, திருச்சி, சென்னை பொலிஸார் சவுக்கு சங்கரை கைது செய்தனர்.



இந்த நிலையில், நீதிமன்ற உத்தரவின்பேரில் மாநகர சைபர் க்ரைம் பொலிஸார், சவுக்கு சங்கரிடம் விசாரணை நடத்தி முடித்தனர். பின்னர் சவுக்கு சங்கரை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதையடுத்து, மீண்டும் அவர் கோவை சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் சவுக்கு சங்கரின் பிணை மனு விசாரணைக்கு வந்தபோது எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தர விட்டார். (எ)

# “போக்சோ குற்றவாளிகள் தப்பிப்பது அதிகரிப்பு”

சென்னை, மே 16

போக்சோ வழக்குகளில் குற்றவாளிகள் அதிகளவில் விடுதலை செய்யப்படுவதற்கு காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அவற்றைக் களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் எதிரிகள் விடுதலை செய்யப்படுவதும், வழக்கு விசாரணைகள் தேக்கமடைவதும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. போக்சோ எனப்படும் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கத்துக்கு எதிரான திசையில் இவ்வழக்குகளின் விசாரணை செல்வது கவலையளிக்கிறது.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட மனித மிருகங்கள் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும். அப்போது தான் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைச் செய்ய மற்றவர்கள் அஞ்சுவார்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையில் தான் வழக்குகளை விரைந்து விசாரிக்க வசதியாக சிறப்பு போக்சோ நீதிமன்றங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால், அதன் பிறகும் போக்சோ வழக்குகளின் விசாரணை தாமதிக்கப்படுவது சரியல்ல. இது குற்றவாளிகள் தப்பிக்கவும், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பெருகுவதற்கும் மட்டுமே வகை செய்யும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# யானைகள் வழித்தட வரைவு அறிக்கையை தமிழாக்கம் செய்க

சென்னை, மே 16

யானைகள் வழித்தடம் குறித்த வரைவு அறிக்கையை தமிழாக்கம் செய்து பொதுமக்களின் கருத்துக்களை பெறாமல் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்க தி. மு. க. முயற்சிக்கிறது என முன்னாள் முதல்வர் ஓ. பி. எஸ். குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், முழு அறிக்கையையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடவும், மக்களின் விருப்பத்திற்கிணங்க திட்டத்தை செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு குறித்து சிந்திப்பவரே ஜனாதிபதியாக வேண்டும்!

## துமிந்த திசாநாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 16

**நாடு தொடர்பாக சிந்தித்துச் செயற்படும் ஜனாதிபதி ஒருவரே தெரிவு செய்யப்பட வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.**

சுதந்திரக்கட்சியின் பதில் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தரப்பினர் மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கிடையில் கொழும்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினரகளை ஒன்றிணைத்து நாம் கூட்டணி அமைக்க நாம் ஏற்கனவே தீர்மானித்திருந்தோம்.

அதன் முதற்கட்டமாகவே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. புதிய கூட்டணி தொடர்பாக எதிர்காலத்தில் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடுவதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம்.

நாட்டை நெருக்கடி நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்கு அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நாடு தொடர்பாக சிந்திக்க வேண்டிய தருணம். நாடு தொடர்பாக சிந்தித்தே தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவது யாராக இருந்தாலும் புதிய கூட்டணியாக நாம் ஆதரவு வழங்குவோம்.

இந்த நாட்டின் அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பாக மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

எனவே நாடு தொடர்பாக சிந்தித்து செயற்படும் ஜனாதிபதி ஒருவரே தெரிவு செய்யப்படுவார்-என்றார். (அ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்த 1,600 சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே. 16

இலங்கைக்குச் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகம, கட்டகேவத்த பகுதியில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டார்.

இந்த சுற்றிவளைப்பின்போது சுமார் 2,50,000 ரூபா பெறுமதியான 1,600 சட்டவிரோத சிகரெட்டுக்களை கைப்பற்றியதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ராகம பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர் விசாரணைக்காக ராகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# மாடியிலிருந்து வீழ்ந்து இளம் பெண் உயிரிழப்பு

கொழும்பு, மே. 16

கம்பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிஹில்லதெனிய பகுதியில் உள்ள வீடொன்றின் முதலாம் மாடியிலிருந்து வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை , பிஹில்லதெனிய பகுதியைச் சேர்ந்த 35 வயது பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் பிஹில்லதெனிய பகுதியில் உள்ள வீடொன்றின் முதலாம் மாடியிலிருந்து வீழ்ந்து காயமடைந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 24 மணித்தியாலங்களுள் ஏழு மாணவிகள் துஷ்பிரயோகம்

## நால்வர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே. 16

நேற்றுக் காலை முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களுக்குள், 16 வயதுக்குட்பட்ட ஏழு பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த பாடசாலை மாணவிகள் 12, 14, 10 மற்றும் 15 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன், மனம்பிட்டிய, மாங்குளம், இரத்தினபுரி, வெல்லம்பிட்டிய, வெல்லாவெளி மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 15 வயதுச் சிறுமி குழந்தை பிரசவிப்பு; வன்புணர்வு செய்த இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், மே. 16

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரசவித்த குழந்தையை கைவிட்டு சென்ற 15 வயதுடைய சிறுமி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் 15 வயதான பாடசாலை மாணவி பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். தாயாரும் குறித்து சிறுமியுடன் உதவிக்கு நின்றுள்ளார்.

சிறுமிக்கு குழந்தை பிறந்தது மறுநாள், தாயும் சிறுமியும் குழந்தையை வைத்தியசாலையில் கைவிட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சிறுமி நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்தவர் என கண்டறிந்து , அது தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் , குழந்தையை பிரசவித்த சிறுமியையும் அவரது தாயாரையும் கண்டறிந்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் , மாணவியை வன்புணர்வுக்குட்படுத்தி, கர்ப்பமாக்கிய மல்லாவி பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# விஜயதாஸவின் ஆட்சேபனை நீதிமன்றத்தினால் நிராகரிப்பு

கொழும்பு, மே. 16

சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்கவின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கவேண்டாம் என கோரி தாக்கல் செய்த மனுவுக்கு எதிராக கட்சியின் தவிசாளர் விஜயதாச ராஜபக்ஸ தாக்கல் செய்த ஆட்சேபனை, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நேற்று பிற்பகல் 1 மணிக்கு ஆராய்வதாக நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதியான நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஸவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நேற்று முன் தினம் அடிப்படை ஆட்சேபனையை தாக்கல் செய்தது டன், நீதிமன்றம் அந்த ஆட்சேபனையை நிராகரித்தது.

கடுவலை மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்துள்ள நிலையில், மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் மீண்டும் தடையுத்தரவை கோர முடியாது என ரொமேஷ் டி சில்வா நேற்று முன் தினம் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கும் இந்த நீதிமன்றத்திற்கு சட்ட ஏற்பாடுகள் காணப்படுவதாக நீதிபதி சந்துன் விதான இதன்போது கூறினார். (அ)

# பொய் கூறி யாசகம் பெற்றவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், மே. 16

காத்தான்குடி பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வந்து தனது மகளுக்கு சிறுநீரக சிகிச்சைக்கு பணம் வேண்டும் என பொய் கூறி யாசகம் பெற்ற தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கல்வியங்காடு சந்தைப் பகுதியில் 4 வயதுச் சிறுமியை சக்கர நாற்காலியில் இருத்தி சிறுமியின் இரு சிறுநீரகங்கள் பழுதடைந்துள்ளதாகவும், அதற்கான சிகிச்சைக்கு பண உதவி செய்யுமாறும் கோரி ஒருவர் யாசகம் பெற்றுள்ளார்.

யாழில் நிலவும் கடுமையான வெப்பமான காலநிலையில், வெயிலுக்குள் சிறுமியை சக்கர நாற்காலியில் இருத்தி வைத்து ஒருவர் யாசகம் பெறுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சிறுமியை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் யாசகம் பெற்ற நபரையும் கைது செய்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையில் சிறுமிக்கு எவ்விதமான உடல்நல குறைபாடுகளும் இல்லை எனவும் சிறுமி ஆரோக்கியமாக்கவுள்ளார் என வும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் மேற்றுக்கொண்ட விசாரணையின்போது, தான் காத்தான்குடி பகுதியை சேர்ந்தவர் எனவும், சிறுமி தனது மகள் எனவும் கூறியுள்ளார்.

மேலும் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறும், சிறுமியை சிறுவர் காப்பகத்தில் அனுமதிக்குமாறும் நீதிமன்றில் உத்தரவிட்டுள்ளது.

# சிகரெட் விற்பனை வீழ்ச்சி!

கொழும்பு, மே. 16

நாட்டில் இவ்வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் சிகரெட் விற்பனையானது கடந்த ஆண்டை விட குறைவடைந்துள்ளதாக இலங்கை புகையிலை உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்பு, மக்களின் வருமானம் வீழ்ச்சி மற்றும் பொருளாதார நெருக்கடிகளே இதற்கு காரணம் என இலங்கை புகையிலை உற்பத்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை சிகரெட் விற்பனை வருமானம் 46.93 பில்லியன் ரூபாவில் இருந்து 45.85 பில்லியன் ரூபாவாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று சிகரெட்டுக்கான வரி அதிகரிப்பு காரணமாக சிகரெட் பாவனையாளர்களில் அதிகமானோர் பீடி பாவனைக்கு பழகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் குறித்து ஜனாதிபதி உரிய பதிலைத் தரவில்லை

## பொதுஜன பெரமுன கவலை

கொழும்பு, மே. 16

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்து இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ கடந்த திங்கள் ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றுள்ள ஏழாவது கலந்துரையாடல் எனவும் கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில், நாட்டின் அபிவிருத்தி தொடர்பான கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுன மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பரீட்சைக்குத் தோற்றிய இரு மாணவிகள் மாயம்!

கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தர பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சை நிலையத்துக்கு சென்ற இரு பாடசாலை மாணவிகள் வீடுகளுக்கு திரும்பவில்லை என அவர்களது உறவினர்களால் கினிகத்தேனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்கள் இருவரும் நேற்று முன் தினம் காலை பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அம்பகமுவ தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்துக்கு சென்றுள்ளனர்.

அதில் மாணவி ஒருவர் தனது பெற்றோருடன் பரீட்சை நிலையத்துக்கு வந்திருந்ததாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கினிகத்தேனை, அக்ரஓயா மற்றும் நாவலப்பிட்டி நாகஸ் தென்ன பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு மாணவிகளும் நண்பிகள் என தெரியவந்துள்ளது.

பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் பரீட்சை நிலையத்திற்கு அருகில் இருவரும் பேசிக் கொண்டிருப்பதை சில மாணவர்கள் பார்த்துள்ளனர்.

காணாமல்போன மாணவிகளின் தகவல்கள் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வும், இது தொடர்பில் கினிகத்தேனை பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# எதிரணிகளை ஒன்றிணைக்குமாறு சந்திரிகாவை அழைக்கிறார் டிலான்



கொழும்பு, மே. 16

ரணில்-ராஜபக்ச அரசை விரட்டியடிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடன் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்கும் பொறுப்பை முன்னெடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு அழைப்பு விடுத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது. நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டவர்கள் அரசு பக்கமே உள்ளனர். இதே வழியில் சுதந்திரக்கட்சி பயணித்தால் யானை விழுங்கிய விளாம் பழத்தின் நிலையே சுதந்திரக் கட்சிக்கு ஏற்படும்.

அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருக்கவும், ஊழல் மிகு இந்த அரசை விரட்டியடிப் பதற்காகவும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் அனைத்து சக்திகளையும் இணைக்கும் பொறுப்பை முன்னெடுக்குமாறு சந்திரிக்கா அம்மையாருக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

இன்னும் ஐந்து பௌர்ணமி தினங்களுக்குள் இந்த அரசு நிச்சயம் விரட்டியடிக்கப்படும்- என்றார். (அ)

# குமுதினி படுகொலை சம்பவம் 39 ஆண்டுகள் நிறைவு நிகழ்வு!





யாழ்ப்பாணம், மே. 16

குமுதினி படகில் பயணித்த 36 தமிழர்கள் இலங்கை கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 39 ஆண்டுகள் நிறைவடைந்தன.

குமுதினி படுகொலையின் 39ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று காலை நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினி படுகொலை நினைவுத் தூபியில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு உணர்வெளிச்சியுடன் நடைபெற்றது.

குமுதினி படகில் இருந்து கடலில் மலர்தூவி உயிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிரிழந்தவர்களின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (அ)






# சந்நிதி-கதிர்காமம் யாத்திரை குழு கிளிநொச்சியை சென்றடைந்தது!

முல்லைத்தீவு, மே. 16

சந்நிதி-கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி குழுவினர் நான்கு நாட்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

அங்கு அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது தெரிந்ததே.

நேற்று புதன்கிழமை ஐந்தாவது நாள் குழுவினர் இயக்கச்சி-ஆனையிறவு ஊடாக பரந்தன் பகுதியை வந்தடைந்தனர்.

இன்று வியாழக்கிழமை வள்ளிபுனம் பிரதேசத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

மழையும் வெயிலும் கலந்த காலநிலையில் சுமார் 110 அடியார்கள் இப் பாதயாத்திரையில் பங்கேற்று வருகின்றனர். (அ)

# ரணிலின் பிரசாரத்துக்கு அமெரிக்க குழு; அடியோடு மறுக்கும் ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, மே. 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார நடவடிக்கைகளை கையாள்வதற்காக அமெரிக்க குழுவொன்று இலங்கை வந்துள்ளதாக கூறப்படுவதனை ஐக்கிய தேசியக் கட்சி மறுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ள கொழும்பு மாவட்ட அமைப்பாளர் லசந்த குணவர்தன இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த விடயத்தில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை எனவும், ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் வெளிநாட்டவர்களின்



தலையீடு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை கையாண்ட அமெரிக்க குழுவொன்று ரணிலின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை கையாள்வதற்காக இலங்கைக்கு வருகைதந்துள்ளதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன், குறித்த குழுவினர் சில அமைச்சர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல்கள் உட்பட ஆரம்பகட்ட நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பின்னணியிலே, ஏனைய கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அமைப்பது தொடர்பில் பல்வேறு கட்சிகளுடன் கலந்துரையாடிவரும் நிலையில், எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி அமைப்பது தொடர்பில் உறுதியான தீர்மானங்கள் எட்டப்படவில்லை எனவும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் லசந்த குணவர்தன தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலை ஒழிப்பதற்கு புரட்சிகரமான நகர்வு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே. 16

**ஊழலை ஒழிக்க பல புரட்சிகரமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



தெல்தெனிய நீதிமன்ற வளாகத்தை நேற்று புதன்கிழமை காலை திறந்துவைத்து உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2 வருடங்களில் 75 புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதாகவும் இதன் மூலம் தெற்காசியாவில் புதிய சட்ட முறைமை செயற்படுத்தும் ஒரே நாடு இலங்கை. ஊழலை ஒழிக்க பல புரட்சிகரமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளோம்.

அரசாங்கம் திருடர்களை பாதுகாப்பதாக சிலர் குற்றம் சுமத்தினாலும் திருடர்களைப் பிடிப்பதற்காக அரசாங்கம் பல புதிய சட்டங்களை கொண்டு வந்துள்ளது.

"ஊழலை ஒழிப்போம்" என்பதை அரசியல் கோஷமாக பயன்படுத்துவதைக் கைவிட்டு, புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்-என்றார்.

(அ)

# உயர்தரத்துக்கு வகுப்புகளை ஆரம்பிப்பதில் பல சிக்கல்கள்!

கொழும்பு, மே. 16

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகுவதற்கு முன்னர் உயர் தரத்திற்கான வகுப்புகளை ஆரம்பிப்பதில் பல சிக்கல்கள் நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகுவதற்கு முன்னர் உயர் தரத்திற்கான வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்வைத்த யோசனைக்கு அமைய, அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

தற்போது கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி வரும் மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகளை எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் வரை மாத்திரம் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பாடசாலை மாணவர்களை, உயர்தரத்திற்காக அருகிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் எமது செய்திச் சேவைக்கு கருத்துரைத்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பாடசாலைகளில் வளங்கள் பற்றாக்குறை காணப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

(அ)

# ரணில் வெல்வதை தடுக்கமுடியாது!

## கூறுகிறார் நவீன் திஸநாயக்க

கொழும்பு, மே. 16

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் முன்முனைப் போட்டி நிலவும் எனவும், அதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவதை எவராலும் தடுக்க முடியாது எனவும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அடுத்த தேர்தலில் களமிறங்கவுள்ளதாக சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அறிவித்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவும் அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் தேசிய வேட்பாளராக போட்டியிடுவார்.

இவர்கள் மூவருமே பிரதான வேட்பாளர்கள், இவ்வாறு ஜனாதிபதி தேர்தலின்போது மும்முனை போட்டி நிலவும் என்பதால் எதிர்க்கட்சிகளின் வாக்குகள் சிதறும். இதுவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றிவாய்ப்பாக அமையும். எனவே, ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது-என்றார்.

(அ)

# அரச உத்தியோகத்தரின் இறப்பர் முத்திரையை போலியாக தயாரித்து 17 இலட்சம் ரூபா மோசடி!

யாழ்ப்பாணம், மே. 16

கரவெட்டியில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரின் இறப்பர் முத்திரையை போலியாகத் தயாரித்து சுமார் 17 இலட்சம் ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆலயத்தின் தலைவரே இவ்வாறு ஆலய நிலையான வைப்பில் இருந்த பெருந்தொகையான நிதியைக் களவாடியுள்ளார்.

2023 ஒக்ரோபர் மாதமளவில் 10 இலட்சம் ரூபாவும், 2024 ஜனவரி மாதமளவில் 7 இலட்சம் ரூபாவும் மோசடியாக பெறப்பட்டுள்ளது.

இதற்காக போலியாக கூட்டறிக்கை தயாரித்து கலாசார உத்தியோகத்தரின் இறப்பர் முத்திரையையும் போலியாக தயார் செய்து நெல்லியடி பிரபல வங்கியிலிருந்த பணம் மோசடியாகப் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களின் மோசடி அம்பலம் ஆகியதும் உபதலைவர், பொருளாளர் தாமாகவே முன்வந்து பணத்தை வட்டியும் முதலுமாகச் செலுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கரவெட்டி பிரதேச செயலாளரை தொடர்புகொண்டு கேட்டபோது, போலி இறப்பர் முத்திரை பயன்படுத்தி பணம் எடுக்கப்பட்டமை உண்மை எனவும் அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தனர்.

(அ)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அன்னையர் தினச் சிறப்பு நிகழ்வு

## விருந்தினராக மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரன்

யாழ்ப்பாணம், மே. 16

அன்னையர் தினத்தைச் சிறப்பிக்கும் ஒன்றுகூடல் நேற்று புதன்கிழமை காலை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம் பெற்றது.

உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி விமல்ராஜ் உஷாநந்தினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மூத்த எழுத்தாளரும் உளவளத் துணையாளருமாகிய கோகிலா மகேந்திரன் கலந்து கொண்டு அன்னையாக ஆசிரியர் என்ற பொருளில் உரையாற்றினார்.

நிகழ்வில் அன்னையர் தினம் குறித்த ஆசிரிய மாணவர் உரையை றோமன் கத்தோலிக்க நெறியைச் சேர்ந்த கமலினி சுதாகர் ஆற்றினார்.

அதிதி அறிமுகவுரையை விரிவுரையாளர் வே. சேந்தன் நிகழ்த்தினார். கலாசாலையின் றோமன் கத்தோலிக்கம், உடற்கல்வி, விசேட கல்வி ஆங்கிலம் ஆகிய நெறிகளைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் இணைந்து உருவாக்கிய அன்னையர் தினம் பற்றிய ஆவணப் படமும் திரையிடப்பட்டது.







கலாசாலை அதிபர் ச. லலீசன் நிறைவுரையாற்றினார். கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட கோகிலா மகேந்திரன் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

(அ)



# ஜனாதிபதி செயலகத்திற்கு முன் திடீரென்று வெடித்த போராட்டம்

## பதாகைகளை அகற்றியதால் பதற்றம்

கொழும்பு, மே. 16

ஆர்ப்பாட்டமொன்று காரணமாக நேற்று ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அமைதியின்மை ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப் பத்திரத்தை மீள வழங்க எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலஞ்சம், ஊழல், வீண்விரயத்திற்கு எதிரான பிரஜைகள் அமைப்பு ஏற்பாடு செய்த எதிர்ப்பு நடவடிக்கை காரணமாகவே இந்த அமைதியின்மை ஏற்பட்டது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகைகளை அப்புறப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதையடுத்தே, அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கபில முனசிங்கவிடம் மகஜரொன்றை கையளித்துள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இல்மனைற் அகழ்வுப் பணி உடனடியாக நிறுத்தப்பட்டது!

## கோடீஸ்வரன் குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

காரைதீவு, மே. 16

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் குழுவினர் மேற்கொண்ட சந்திப்பின் எதிரொலியாக அம்பாறை தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இல்மனைற் அகழ்வு உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.**



இச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதியுடன் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்கள் . சுமார் ஒரு மணி நேரம் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் மன்னர் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன்,

சமூக செயற்பாட்டாளரும் மாணவர் மீட்பு பேரவைத் தலைவருமான செல்வராஜா கணேசானந்தம், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் க. சிவலிங்கம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதேச தலைவர் கே.ஜெகநாதன் (குமார்) ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஜனாதிபதி தரப்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் மற்றும் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்னைகள் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடல் இடம் பெற்றது . விரிவான மகஜரும் சமர்ப்பிக்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான கணக்காளர் நியமித்தல் மற்றும் புதிய கணக்கு ஆரம்பித்தல் தொடர்பாக ஆரம்பத்தில் விரிவாக பேசப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று அழுத்தமான கோரிக்கையை கோடீஸ்வரன் முன்வைத்தார்.

அப்படி அதனை செய்யும் பட்சத்தில் தங்களுக்கான ஆதரவை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் முழுமையாக வழங்குவார்கள் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி அதனை பரிசீலிப்பதாகவும் நாளை பிரதமருடன் கலந்துரையாடிவிட்டு இதனைச் செயல்படுத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

திருக்கோவில், ஆலையடி வேம்பு, பொத்துவில் போன்ற பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வு தொடர்ச்சியாக இடம் பெறுவதாக குழுவினரால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால் கடல் தொழில் புரிகின்ற ஏனைய விவசாயத்துடன் தொடர்புபட்ட தமிழ் மக்கள் சுமார் 15000 பேர் நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

அது மட்டுமல்ல கடல் வளம் முருகைக் கற்கள் மீன்பிடி போன்றன பாதிக்கப்பட்டு வருகின்றன.

இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதனை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்த இடத்தில் தொலைபேசி தொடர்பு கொண்டு பணிப்புரை விடுத்தார்.

மேலும் புதிய உள்ளூராட்சிச் சபைகளை ஏற்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

குறிப்பாக பொத்துவில் வடக்கை மையமாக வைத்து ஒரு பிரதேச சபையும் சம்மாந்துறை மேற்கு தமிழ் பிரதேசங்களை மையமாக வைத்து மல்வத்தை பிரதேச சபையும் ஏற்படுத்தப்படுவதன் அவசியத்தை கோடீஸ்வரன் எடுத்துரைத்தார்.

மேலும் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளை உள்ளடக்கியதாக ஒரு புதிய வலயம் உருவாக்கு தொடர்பாகவும் அங்கே பேசப்பட்டது.

அடுத்து தமிழர் பிரதேசங்கள் பொதுவான நிதிப்பங்கீட்டில் பாரிய புறக்கணிப்பை எதிர் நோக்கி வருகின்றது. தமிழர் பிரதேசங்களில் இணைப்பு குழு தலைவர்களாக பிறர் இருப்பதால் இந்த புறக்கணிப்பு பாரபட்ச இடம் பெறுவது சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை பெயரளவில் நான்கு ஐந்து வைத்தியர்களுடன் உடன் இயங்குவதாகவும் அங்கு உண்மையில் 25க்கு மேற்பட்ட வைத்தியர்கள் ஆளணி தேவைப்படுவதாகவும் ஏனைய வைத்திய உபகரணங்கள் அங்கு வழங்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச பெரிய களப்பில் கடல் நீர் கலப்பதால் ஏற்படும் பாதிப்பு பற்றி கூறப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பதாக இங்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை படிப்படியாக செய்வதாக ஜனாதிபதி உறுதி அளித்தார். (அ)

# அக்கரைப்பற்றில் தாதியர் தினம்



மட்டக்கலப்பு, மே. 16

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்ட சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அர்பணிப்புடன் சேவையாற்றும் தாதியர்களை கௌரவிக்கும் முகமாக அக்கரைப்பற்று ஐ.என்.பீ.எஸ்.கெம்பஸ் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் "சர்வதேச தாதியர் தின" நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் விஷேட வளவாளராக சிரேஸ்ட உளவளத் துறை ஆலோசகரும் விரிவுரையாளருமான மனூஸ் அபூபக்கர் உள்ளிட்ட அதிதிகள் மற்றும் தாதிய உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

# மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் விஜயம்

## அபிவிருத்தி பணிகளுக்காக நிதியும் ஒதுக்கினார்



அம்பாறை, மே. 16

கல்முனை பிராந்தியத்தில் மட்டுமன்றி தேசிய ரீதியாகவும் புகழ்பெற்ற மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரிக்கு பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் விஜயம் செய்து பாடசாலையின் கல்வி அடைவு மட்டங்கள், பௌதீக மற்றும் ஆளணி விடயங்கள், கல்வி மேம்பாட்டு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

கல்லூரி முதல்வர் ஐ. உபைதுல்லா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எம்.எம். அனஸ், ரஸ்மி மூஸா, உதவி அதிபர் எம்.எஸ். நிஹால், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் ரீ. றிஹான் மற்றும் உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு பாடசாலையின் மேம்பாட்டு விடயங்கள் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பில் ஹரீஸ் எம்.பியுடன் கலந்துரையாடினர்.

இதன்போது மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி மேம்பாட்டுக்காக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களினால் ஒதுக்கப்பட்ட நிதிக்கான ஆவணத்தை பாடசாலை அதிபர் ஐ. உபைதுல்லாஹ் விடமும், பெண்கள் பிரிவின் கடிதத்தை பிரதி அதிபர் எம்.எம். அனஸ் அவர்களிடமும் பாராளுமன்ற உறுப்பினர் கையளித்தார். இதன்போது மஸ்ஜிதுன் நூர் ஜு/ம்மா பள்ளிவாசலின் நிதி ஒதுக்கீட்டு கடிதத்தையும் பள்ளிவாசல் பொருளாளர் எஸ்.எம். றபாயிடீனிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# சிறுமியை கடத்தி சென்று பாலியல் துஷ்பிரயோகம்!

## இரு இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு, மே. 16

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் தனது அம்மம்மா வீட்டுக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த 15 வயதுச் சிறுமியை கடத்திச் சென்று காட்டுப் பகுதியில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 26, 21 வயதுடைய இளைஞர்கள் இருவரை கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளதாக வெல்லாவெளி பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமி கடந்த 7ஆம் திகதி தனது வீட்டிலிருந்து அம்மம்மா வீட்டுக்குச் சென்று அங்கிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது காட்டுப் பகுதியை அண்டிய பகுதியில் வைத்து சிறுமியை இரு இளைஞர்கள் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோம் செய்துள்ளனர்.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து பொலிஸ் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை செய்த முறைப்பாட்டையடுத்து அந்த பகுதியைச் சேர்ந்த 26,21 வயதுடைய இரு இளைஞர்களைக் கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி புகலிடமான ரபா நகரிலிருந்து 4.5 இலட்சம் பலஸ்தீனர் வெளியேற்றம்!

காசா, மே 16

பலஸ்தீனர்களின் கடைசி புகலிடமான ரபா நகரிலிருந்து கடந்த வாரத்தில் நான்கரை இலட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டனர் என்று ஐ. நா. அறிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரால் காசா முனை பேரழிவை சந்தித்துள்ளது. காசாவில் குழந்தைகள் - சிறுவர்கள் - பெண்கள் உள்பட 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர்.



இதனிடையே, இலட்சக்கணக்கானோர் தஞ்சம் அடைந்துள்ள தெற்கு காசாவின் ரபா நகரம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளது. பலஸ்தீனர்களின் கடைசி புகலிடமாகவுள்ள ரபாவில் இருந்து வெளியேறுமாறு அவர்களை இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.

இதையடுத்து ரபாவில் இருந்து அவர்கள் வெளியேறி வருகிறார்கள். இதனிடையே, கடந்த வாரத்தில் குறைந்தது 4.5 இலட்சம் பலஸ்தீனியர்கள் ரபா நகரில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்று ஐ. நா. தெரிவித்துள்ளது. (ஐ)

# இஸ்ரேலுக்கு ரூ. 30 ஆயிரம் கோடி ஆயுதங்களை அனுப்பும் பைடன்!

வாஷிங்டன், மே 16

இஸ்ரேலின் தாக்குதலுக்கு அழுத்தம் கொடுத்தாலும் இஸ்ரேலுக்கு 100 கோடி டொலருக்கும் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாய்) அதிகமான ஆயுதங்களை அனுப்ப விரும்புவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

மோட்டார் குண்டுகள், கவச எதிர்ப்பு தந்திரோபாய வாகனங்கள், யுத்த டாங்கிகள் மற்றும் அதற்கான குண்டுகளையே அமெரிக்கா இஸ்ரேலுக்கு அனுப்பவுள்ளது.

ரபா நகரின் மீது இஸ்ரேல் பெரும் படையெடுப்பை நடத்தினால் ஆயுதங்களை வழங்க மாட்டோம்'என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் அறிவித்திருந்தார். வெடிமருந்துகளை இஸ்ரேலுக்கு அனுப்புவதைத் தாம் தாமதித்துள்ளதாகவும் அவர் கூறியிருந்தார். இந்நிலையிலேயே, மீண்டும் 100 கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்கள் அனுப்பப்படவுள்ளன.

ஹமாஸ் அமைப்பு கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில் 1200 பேர் கொல்லப்பட்டனர். 252 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்தப் போரில் நேற்று காலையுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் கொல்லப்பட்ட 82 பேர் உட்பட 35 ஆயிரத்து 170இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்று காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)



# ஆப்கானில் வெள்ளப்பெருக்கால் 40 ஆயிரம் சிறார் கல்வி இழந்தனர்!

காபூல், மே 16

ஆப்கானிஸ்தானில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 40 ஆயிரம் சிறார்கள் கல்வியை இழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானின் பாக்லான் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்த வெள்ளப்பெருக்கால் ஏராளமானவர்கள் இருப்பிடங்களை இழந்தனர். பலர் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டனர். இந்த வெள்ளப்பெருக்கால் அங்கு சுமார் 40 ஆயிரம் குழந்தைகள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். இதனால் அவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ஐ)

# சிறை வாகன அணியை தாக்கி கைதியை மீட்ட ஆயுததாரிகள்!


## காவலர்கள் இருவர் உயிரிழப்பு

பாரிஸ், மே 16

முக்கிய கைதி ஒருவரை ஏற்றிச் சென்று கொண்டிருந்த சிறைச்சாலை வாகனம்மீது ஆயுததாரிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அங்கு நடந்த துப்பாக்கிச் சண்டையில் சிறைக் காவலர்கள் இருவர் உயிரிழந்தனர். மூன்று பேர்.காயமடைந்தனர். தாக்குதலை நடத்தியோர் கைதியை மீட்டுக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பிரான்ஸின் வடக்கில் நோர்மண்டி பிராந்தியத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பகல் 11 மணி (உள்ளூர் நேரம்) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறைச்சாலை வாகன அணி நெடுஞ்சாலை கட்டணத்தை செலுத்துவதற்காக தரித்து நின்ற சமயம், கறுப்பு வாகனத்தில் முகத்தை மூடியபடி வந்தவர்கள் தாக்குதலை நடத்தினர்.



அத்துடன், கைதியையும் மீட்டு தப்பிச் சென்றனர். இதில் இரண்டு சிறைக் காவலர்கள் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

தப்பிச் சென்றுள்ள 30 வயதான கைதி போதைப் பொருள் கடத்தல்கள் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளி என்று தெரிவிக்கப்படுகிறது. "ஃபிளை" என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற முகமட் அம்ரா என்று அறியப்படுகின்றார்.

தப்பிச் சென்ற கைதியை மீட்பதற்கு 200 படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# "கடவுளின் கைகளை" படமாக்கிய தொலைநோக்கி!

நியூயோர்க், மே 16

"கடவுளின் கைகள்" என்றழைக்கப்படும் வால் நட்சத்திரக் கூட்டமைப்பை கடந்த வாரம் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

தென்னமெரிக்க நாடான சிலியில் கடல் மட்டத்திலிருந்து 7200 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள விக்டர். எம். பிளாங்கோ என்ற தொலைநோக்கி இந்த வால் நட்சத்திரத்தை படம்பிடித்தது.



அந்தப் படத்தில் கடவுளின் கைகள் தூரத்து பால்வெளி மண்டலத்தை பிடிக்கப்போவது போன்ற தோற்றத்தைத் தருகிறது. 'கடவுளின் கைகள்' என்ற பெயருள்ளதால் இதன் அமைப்பில் இயற்கைக்கு அப்பாற்பட்டதாக எதுவுமில்லை.

சி.ஜி.4 எனப்படும் இந்த வால் நட்சத்திரக் கூட்டமைப்பின் அரிய புகைப்படம், பிரபஞ்சம் குறித்து மேலும் ஆழமாக அறிந்துகொள்ள உதவும் என்றும் கூறப்படுகிறது.

முதன்முதலில் 1976இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வால் நட்சத்திரக் கூட்டமைப்பு, உண்மையான வால் நட்சத்திரங்களைக் கொண்டதல்ல. இவை, ஒளிரும் நீண்ட வால் நட்சத்திரத்தை போன்ற வடிவிலான, மேகத்திரள்கள் போன்ற தோற்றம் கொண்ட வாயு மற்றும் தூசுக்களால் நிறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அருகிலுள்ள நட்சத்திர மண்டலங்களிலிருந்து வரும் கதிர்வீச்சுகளைக் கொண்டு உருவாகும் புதிய நட்சத்திரங்களைத் தனது மையங்களில் கொண்டிருக்கும் இந்த வால் நட்சத்திர கூட்டமைப்பு, புதிய நட்சத்திரங்களின் பிறப்பிலும், நட்சத்திர மண்டலங்களின்பரிணாம வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக போராட்டங்களை தீவிரமாக்குக

## ஆசியில் கோரிக்கை

மெல்பர்ன், மே 16

அவுஸ்திரேலியாவில் உள்ள பலஸ்தீன ஆதரவாளர்கள் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை தீவிரப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யுத்தத்தை குழப்புதல் என்ற அமைப்பு நக்பாவின் 76ஆவது தினமான நேற்று பலஸ்தீனத்திற்காக உங்கள் நகரங்களை முடக்குங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

அராபிய மொழியில் நக்பா எனப்படுவது 1948ஆம் ஆண்டு அராபிய இஸ்ரேல் யுத்தத்தின் போது மிகப்பெருமளவில் பலஸ்தீன மக்கள் தங்கள் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டதை குறிக்கின்றது .

இந்நிலையில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை தொடர்வதுடன் பல்லாயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் தங்கள் பகுதிகளில் இருந்து வெளியேறியுள்ளதை தொடர்ந்து எதிர்ப்பு குறைவதற்கு அனுமதிக்கவேண்டாம் காசாவுக்காக எழுச்சிகொள்வோம் என யுத்தத்தை குழப்புதல் அமைப்பு சமூக ஊடகங்களில் தனது ஆதரவாளர்களை கேட்டுள்ளது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 டிப்ளோமா ஆசிரியர்களுக்கு மிகவிரைவில் நிரந்தர நியமனம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே. 16

**500 டிப்ளோமாதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அந்த நியமனம் வழங்கப்படும் என்றும் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**



500 டிப்ளோமாதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை தற்போது இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில் 100 பேரை தேசிய பாடசாலைகளுக்கும் ஏனைய 400 பேரை கிராமிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கும் என 500 ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி. ரோஹிணி கவிரத்ன எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

ரோஹிணி கவிரத்ன தனது கேள்வியின்போது, இம்முறை ஆங்கில பாடத்தின் கேள்விகள் வழமையான முறைமைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மத்திய மாகாணத்தில் பயிற்றுவிக்கப்பட்ட 5000 ஆங்கில பாட ஆசிரியர்களுக்கானவெற்றிடம் காணப்படுகிறது.

அதேபோன்று, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில பாடசாலைகளில் இராணுவத்தினரே ஆங்கில பாடத்தை கற்பிக்கின்றார்கள். அது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு பதிலளித்தார்.

(அ)

# கெஹலிய ரம்புக்வெலவின் ரிட் மனு 31இல் விசாரணை

கொழும்பு, மே 16

தரமற்ற மருந்து கொள்வனவு சம்பவம் தொடர்பான விசாரணை முடியும் வரை தன்னை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை ரத்து செய்யுமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த ரிட் மனுவை எதிர்வரும் 31ஆம் திகதி பரிசீலிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த மனு நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஷஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த வழக்கு விசாரணைகள் முடியும் வரை தன்னை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி சுகாதார அமைச்சின் முன்னாள் விநியோகப் பணிப்பாளர் கபில விக்கிரமநாயக்கவினால் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி இந்த ரிட் மனுவை பரிசீலிப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் இம்மாதம் 30ஆம் திகதி கூடுமாறும் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கொரோனா தடுப்பூசி குறித்து அச்சமடையத் தேவையில்லை

## தேசிய ஔடத சபை விசேட அறிவிப்பு

கொழும்பு, மே. 16

கொரோனா காலப் பகுதியில் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என தேசிய ஔடத ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

அதன்படி, பிரித்தானியாவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என உற்பத்தி நிறுவனமே ஏற்றுக்கொண்டதாகவும், அதனை அவர்கள் முன்பே அறிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், தடுப்பூசி எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை அல்ல எனவும், தடுப்பூசி செலுத்தப்பட்ட சில சந்தர்ப்பத்தில் பக்கவிளைவுகள் ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஆகவே, தடுப்பூசி பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாது என விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம மேலும் கூறினார்.

பிரித்தானியாவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என அந்த தடுப்பூசியை உற்பத்தி செய்த நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, குறித்த நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட அஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாணந்துறை கடலில் மூழ்கிய 2 சிறுவர்களை மீட்ட பொலிஸ்

கொழும்பு, மே. 16

பாணந்துறை கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் பாணந்துறை பொலிஸ் உயிர் காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை - அலோபா முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பாணந்துறை கடலில் நீராடிக்கொண்டிருக்கும்போது திடீரென நீரில் மூழ்கியுள்ள நிலையில் அங்கு கடமையிலிருந்த பாணந்துறை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் இவர்களைக் காப்பாற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# தொழுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்த புதிய இணையத்தளம் அங்குரார்ப்பணம்

கொழும்பு, மே. 16

தொழுநோய் தொடர்பில் பொது மக்களிடையே படிப்படியாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தொழுநோய் தடுப்பு இயக்கம் மற்றும் அலையன்ஸ் டெவலப்மெண்ட் டிரஸ்ட் நிறுவனத்தின் கூட்டு முயற்ச்சியில் உருவாக்கப்பட்டுள்ள புதிய இணையத்தளம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது.

அக்ட் ரூ பிரிவேன்ட் என்ற பெயரில் இந்த இணையத்தளம் செயற்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரொஷான் மஹாநாம, அலையன்ஸ் டெவலப்மென்ட் டிரஸ்ட் நிறுவன பணிப்பாளர் ரகு பாலச்சந்திரன், தொழுநோய் தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நிரூபா பல்லேவத்த, தொழுநோய் தடுப்பு இயக்கத்தின் முன்னாள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரனவீர, விசேட வைத்திய நிபுணர் திலினி விஜேசேகர, விசேட வைத்திய நிபுணர் இந்திரா காஹவிட்ட ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ)

# கிராம அலுவலர்கள் சுகவீன லீவு!

கொழும்பு, மே 15

நேற்று முன் தினம் முதல் இன்று வரை 3 நாட்களுக்கு சுகவீன விடுமுறையை அறிவித்து சேவையில் இருந்து விலகியுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தங்களது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காமையினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அகில இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன முனசிங்க தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்களின் சேவையை அரசியலமைப்பில் அங்கீகரித்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த சேவைப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக கிராம உத்தியோகத்தர்கள் கடந்த 2 நாட்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஆஸியில் வேலைவாங்கித் தருவதாக பணம் மோசடி செய்த நபர் கைது!

கொழும்பு, மே. 16

அவுஸ்திரேலியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த நபரை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இலங்கையின் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அவுஸ்திரேலியாவில் தொழில் வழங்கும் வேலைத்திட்டம் உள்ளதாகக் கூறி பண மோசடி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது .

அத்துடன் பொல்ஹாவெல பிரதேசத்தைச் சேர்ந்த மூவரிடமிருந்து மூன்றரை இலட்சம் ரூபா தொடக்கம் 9 இலட்சம் ரூபா வரை பணம் பெற்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொல்கஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணையில், அவர் வேறு ஒருவரின் உதவியுடன் இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அதன்படி, அந்த நபரைக் கைது செய்ய விசாரணை நடத்தி வருகின்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# போலி ஆவணங்களை தயாரித்த 2 பொலிஸ் சார்ஜன்ட்கள் கைது!

கொழும்பு, மே. 16

துலாவெலிய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பான தரவுகளை தகவல் குறிப்பேட்டில் மாற்றி போலி ஆவணங்களைத் தயாரித்ததாகக் கூறப்படும் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்கள் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்களும் கடந்த ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி மதவாச்சி பொலிஸ் பிரிவில் கடமையாற்றியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது, இவர்கள் இருவரும், துலாவெலிய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய சம்பவம் ஒன்று தொடர்பில் தகவல் குறிப்பேட்டில் உள்ள பதிவுகளை மாற்றி அதற்கமைய போலி ஆவணங்களைத் தயாரித்துள்ளதாகக் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.வந்தார்...

நான் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளேன் என அமெரிக்க தூதர் தனது எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் விவசாய மாணவர்களுடன் மறுசுழற்சி மற்றும் பாதுகாப்பு, மரங்களை நடுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பு நிகழ்வு நேற்று ஒழுங்கு செய்யப்பட்டது.

இதன்போது அமெரிக்கத் தூதர் ஜூலி சங் மற்றும் அமெரிக்கன் கோனர் உறுப்பினர்களும் பங்கேற்றனர். (அ)

### பாலியாறு...

அமைச்சர் ஜீவனுடன் இணைந்து வட மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் எந்திரி பாரதிதாசன் ஆகியோரும் அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இதேசமயம், பாலியாறு - வெள்ளாங்குளம் விவசாய சங்கங்களின் தலைவர்கள் இந்த நிகழ்வை புறக்கணித்தனர்.

பாலியாறு தண்ணீர் திட்டம் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரின் மாந்தை மேற்கு, மடு பிரேதச செயலர் பிரிவுகள், முல்லைத்தீவின் மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளும் நன்மையடையவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இரண்டு...

கொண்டு வந்துள்ளது. ஊழல் ஒழிப்பை அரசியல் கோஷமாகக் பயன் படுத்தும் யுகம் முடிவுக்கு வரும் எனவும் தெரிவித்தார்.

கண்டி - தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தங்கியுள்ளது. ஒரு நாடு என்ற சர்வதேச அங்கீகாரம் சட்ட கட்டமைப்பின் செயல்பாட்டில் அடங்கியுள்ளது. நூற்றாண்டுக்குப் பிறகு சட்டத்துறையில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் 75 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில பாராளுமன்றங்கள் 4 அல்லது 5 வருடங்கள் செயல்பட்ட போதிலும் இந்த அளவு சட்டங்களை நிறைவேற்றியதில்லை.

அரசாங்கம் அதன் பணிகளைச் செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை உருவாக்க பாராளுமன்றத்துக்கு வரவேண்டும். அதன்படி புதிய சட்டங்களை நிறைவேற்றி புதிய சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

மேலும், சட்டத்தின் தாமதம் குறித்தும் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். உரிய நேரத்தில் சட்டம் செயல்படுத்தப்படுத்துவதே எம் முன்பாக இருக்கும் சவாலாகும். வழக்கு விசாரணைகள் திறம்பட நடத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் பெருமளவில் வழக்குகள் புதிதாக தாக்கல் செய்யப்படும்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு சொத்துகளை அழித்தால் அங்கே சட்டமே இருக்காது. ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தின் ஆட்சியிலேயே தங்கியிருக்கிறது. நீதி நிலைநாட்டப்படும்போது மாத்திரமே நாடு என்ற வகையில் அங்கீகாரம் கிடைக்கும். இல்லாவிட்டால் நாட்டில் அபிவிருத்தி இருக்காது. முதலீடுகளை எதிர்பார்க்கவும் முடியாது. அதனால் புதிய சட்டக் கட்டமைப்பை நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறோம் - என்றார். (எ)

### இந்தியாவுடன்...

செய்கின்றோம். சிறிய அளவிலேயே அவற்றை செய்கிறோம். தற்போது, நாம் இந்தியாவுடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம் - பேச்சுகள் தொடர்கின்றன.

எனினும், இந்தத் தருணத்தில் நாங்கள் இந்தியாவிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. இந்திய - இலங்கை பாதுகாப்பு உறவுகள் சிறந்த நிலையில் உள்ளன. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இந்தியாவின் ஆயுத உற்பத்தித் துறை பல மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது - என்றும் கூறினார். (ஐ)

### உண்மை...

மறுசீரமைப்புத் திட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், அமெரிக்கா அபிவிருத்தி சகாவாக விளங்குவதற்கு தயார் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு நிதி ஆலோசனை மற்றும் கடனை வழங்க தயார் எனவும் கூறினார்.

இரு தரப்பு உறவுகளை இலங்கை தொடர்ந்தும் வலுப்படுத்தவேண்டும் என அமெரிக்கா ஊக்குவிக்கின்றது. ஆரோக்கியமான போட்டிதன்மையை பேணுவதற்கு வெளிநாட்டு தரப்புகள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு இலங்கை வாய்ப்புகளை வழங்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அதன் மூலம் கிடைக்கின்ற நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்கவேண்டும் எனவும் அவர் கோரினார். (அ)

### இராணுவத்...

பணியின் போது உயிரிழந்த பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினர் மற்றும் இராணுவத்தினருக்கே இவ்வாறு காணிகள் வழங்கப்படவுள்ளன.

இராணுவத்தினருக்கு காணி வழங்கும் வேலைத்திட்டம் இதற்கு முன்னர் பல தடவை ஆரம்பிக்கப்பட்டது. எனினும், இந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க விசேட குழுவை நியமித்துள்ளார்.

இந்தக் குழு ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய இராணுவத்தினருக்கு காணிகளை வழங்குவது தொடர்பில் பரிசீலித்து அதற்கான பணிகளை விரைவாக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### போதை...

வருமாறு,

கைதான உறவினரான பெண் மூலமாக சிறுமிக்கு அறிமுகமான இளைஞர் கடந்த ஜனவரி மாதம் விடுதிக்கு சிறுமியை அழைத்துச் சென்றுள்ளார். அங்கு அவருக்கு போதை மருந்து கொடுத்து கூட்டு வன்புணர்வில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில், சிறுமியின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள் ளது. இது தொடர்பில் பெற்றோர் அவரிடம் விசாரித்தபோதே சிறுமி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் வவுனியா நகர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

பொலிஸாரின் விசாரணையில், சிறுமி வன்புணரப்படுவதற்கு உதவினார் என்று கூறப்படும் அவரின் உறவினரான 20 வயது பெண்ணும் உடந்தையாக இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து, வவுனியா நகரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வரும் இளைஞர் ஒருவரும் அவரின் நண்பர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறுமியிடம் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ் பொதுவேட்பாளரை வலியுறுத்தும் சிவில் அமைப்புகளை சந்தித்த ஜூலி!



யாழ்ப்பாணம், மே 16

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை வலியுறுத்தும் சிவில் அமைப்புகள் சிலவற்றின் பிரதிநிதிகளை நேற்று யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் பரவலடைந்து - வரவேற்பை பெற்றுள்ள நிலையில் நிகழ்ந்த இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள இலங்கையர்களுக்கான தொடர்ச்சியான அமெரிக்க ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கான வழிகளை ஆராய்வதற்காக சிவில் சமூகம், இளைஞர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட கண்ணோட்டங்களை கேட்பதற்காக இந்த வாரம் நான் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளேன் என்று ஜூலி சங் கூறியிருப்பதும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. (ஐ)

# யாழ். பல்கலையில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இன்று காலை 8 மணி முதல் மருத்துவபீட முன்றலில் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பில் சங்கத்தின் இணைச் செயலாளர் த. சிவரூபன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

“நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் கடந்த 2ஆம் திகதி மதியம் முதல் நடைபெற்று வரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக எமது போராட்டத்தை ஏனையோருக்கும் அறியத்தரும் விதமாகவும், ஏனையவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும்முகமாகவும் மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கையாக வியாழக்கிழமை (இன்று) காலை 8 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறும்”, என்றுள்ளது. (எ)

### விஞ்ஞான...

அறிவித்துள்ளார்.

விஞ்ஞான பாடத்தில் பகுதி 1 வினாத் தாளில் 9, 39ஆவது வினாக்கள் தெளிவற்றவையாக இருந்தன என்று பலரும் முறைப்பாடுகளை செய்திருந்த னர்.

இதையடுத்து, இந்த இரு வினாக்களுக்குமான புள்ளியை அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் வழங்குவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

### 26ஆம் திகதி...

7ஆவது முறையாக சந்தித்த பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ கோரியிருந்தார். ஆனால், அவரின் கோரிக்கைக்கு இதுவரை ஜனாதிபதி உரிய பதில் வழங்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், பொதுஜன பெரமுன கட்சி தனது கட்சிப் பிரசா ரத்தை எதிர்வரும் 26ஆம் திகதி அநுராதபுரத்தில் தொடங்கத் தீர்மானித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### தமிழ்த்...

நாம் அனைவரும் கடைப்பிடிப்போம்.

ஏற்கனவே வட மாகாண சபையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த நிலையில் இதனை உணர்வுபூர்வ மாக தமிழர் தாயகமெங்கும் அனுஷ் டிக்க தமிழ்த் தேசிய சக்திகளோடு கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுக்கின்றது.

இந்த நாளில் முள்ளிவாய்க்கால் சென்று நினைவேந்தக் கூடியவர்கள் வழமைபோன்று முள்ளிவாய்க்கால் பொது கட்டமைப்பு ஒழுங்கு செய்த நிகழ்வுகளில் பெருந்திரளாக பங்கேற்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

இதேநேரம் அங்கு செல்லமுடியாதவர்கள் தங்கள் பிரதேச வழிபாட்டுத் தலங்களில் ஒன்று கூடி பிரார்த்தனைகளை மேற்கொள்ளவும் வேண்டுகின்றோம். அன்றைய தினம் அனைத்து தமிழர் வணிக வளாகங்கள், பொது இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்க விடுமாறும் கறுப்புப் பட்டியுடன் ... கோருகின்றோம்.

எமது தெருக்களை, பொது இடங்களை, வீட்டின் முன்னுள்ள வீதியோரங்களை துப்பரவு செய்வதுடன் அனைத்து கேளிக்கை நிகழ்வுகளையும் தவிர்த்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு நேர உணவாகவேனும் உண்பதற்கு ஒவ்வொரு தமிழ் குடும்பமும் முன் வருவோம். மேலதிக, தனியார் கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் அன்றைய தினம் முழுமையாக நிறுத்தி எம் இளையோருக்கு எம் வலிகளின் ஆழத்தை சாத்வீகமாக உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவோம். இந்த காலப்பகுதியில் இரத்த தான முகாம்களில் பங்கேற்போம்.

வலி சுமந்த குடும்பங்களுக்கு மனரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆறுதல் அளிப்போம். இந்தத் தமிழ்த் தேசிய துக்க நாளில் ஒட்டுமொத்த தமிழராக நிலத்திலும் புலத்திலும் எம் உச்சபட்ச ஆத்மார்த்த உணர்வை அமைதியாக உறுதியாக வெளிக்காட்டுவோம். அதற்காக அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதி கோரும் அமைச்சர்கள்!

கொழும்பு, மே 16

தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதி வழங்குமாறு அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை நடந்த விசேட குழுக் கூட்டத்தில் அமைச்சர்கள் இதனை வலியுறுத்தினர்.

ஆனால், நிதி போதாமையால் காப்புறுதி வழங்கு வது சிரமம் என்று சபாநாயகர் கூறியுள்ளார். எனினும், இந்த விடயம் தொடர்பில் வரும் நாட்களில் உரையாட வும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக அமைச்சர் ஒருவருக்குக் கிடைக்கும் காப்புறுதியின் பெறுமதி 10 இலட்சம் ரூபாய் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ. 9 மில்லியன் பெறுமதியான போதைப்பொருட்கள் சிக்கின



கொழும்பு, மே 16

பல்வேறு நாடுகளிலிருந்து விமான தபால் சேவை மூலம் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத் துக்கு அனுப்பி வைக்கப்பட்ட 9 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் அடங்கிய 10 பொதிகள் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

இந்தப் பொதிகள் கனடா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து தெஹிவளை, வெள்ளவத்தை மற்றும் வேயாங்கொடை ஆகிய பிர தேசங்களுக்கு விமான தபால் சேவை மூலம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தப் பொதிகளிலிருந்து 150 போதை மாத்திரை கள், 466 கிராம் "குஷ்", கஞ்சா மற்றும் 10 கிராம் கொக் கையின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

## பாதாள குழுவைச் சேர்ந்த மேலும் நால்வர் சிக்கினர்

கொழும்பு, மே 16

பாதாள உலகச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவ தற்காக உருவாக்கப்பட்ட விசேட குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின் போது பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணி யதாகக் கூறப்படும் மேலும் 13 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயது சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மாத்தறை மற்றும் அஹங்கம பகுதிகளைச் சேர்ந்த 44 மற்றும் 38 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலகக் குற்றக் குழுக்களைச் சேர்ந்த 1004 பேர் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# ஆள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உறுதி



கொழும்பு, மே 16

**ஆள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக தராதரம் பாராமல் சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப் படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.**

ரஷ்ய - உக்ரைன் போருக்கு ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை கூலிப்படையாகப் பயன்படுத்தி ஆள் கடத்தலில் ஈடுபட்டதாக சந் தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் சில சந்தேக நபர் கள் கைது செய்யப்பட்டுள்ளதா கவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் இராஜாங்க அமைச்சர் குறிப் பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண் டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"ரஷ்ய - உக்ரைன் போரில் தொடர்புபட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. கடந்த பாதுகாப்புச் சபைக் கூட் டத்தில் இவ்விடயம் குறித்து ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க உள் ளிட்ட பாதுகாப்புப் பிரதானிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட் டது.

இந்த விவகாரம் தொடர்பில் 288 முறைப்பாடுகள் கிடைத்துள் ளன. ஆள் கடத்தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட சிலர் கைது செய்யப்பட் டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இந்த ஆள் கடத்தல் குறித்து சமூக வலைத்தளங்கள் மூலம் பிர சாரம் செய்து வருகின்றனர். அதிக சம்பளம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆள் கடத்தலில் பலர் சிக்கியுள்ளனர். எனவேதான் இந்த ஏமாற்று முயற்சி களில் பொதுமக்கள் சிக்கிக்கொள்ள வேண்டாம் என அரசாங்கம் கேட் டுக்கொள்கிறது- என்றார். (எ)

# யுத்தம் தமிழருக்கு எதிரானதென நிரூபணமானால் தமிழீழத்தை நிறுவும் நோக்கம் வெற்றிபெற்றுவிடும்

### சரத் வீரசேகர சொல்கிறார்



கொழும்பு, மே 16

தமிழர்களுக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் வடக்கு, கிழக்கில் தமிழீழத்தை நிறுவ முயற்சிக்கும் அடிப்படை வாத நோக்கம் வெற்றி பெறும் என்று ஆளும் தரப்பு எம்.பி.யான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியம் திரட்டும் நடவடிக்கை கள் தற்போது தீவிரப்படுத்தப்பட் டுள்ளன. இந்த சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு சர்வ தேச நீதிமன்றத்தில் இராணுவத் துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்பது குறித்து உறுப்பு நாடுகளுடன் கலந்துரை யாடுவதாக ஐ. நா. சபையின் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளமை சாதாரண விடயமல்ல - என்றும் நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

மேலும், இஸ்ரேல் நாட்டில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சியின் மீது பலஸ்தீனம் தாக்குதல் மேற் கொண்டதன் பின்னரே இரு தரப் பினருக்கும் இடையிலான முரண் பாடுகள் தீவிரமடைந்துள்ளன. யுத்தம் கொடுமையானது. யுத்தத் தின்போது இரு தரப்பிலும் இழப்புகள் நேரிடும். அப்பாவி மக்களே கொல்லப்படுவார்கள். பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் யுத்தம் தீவிரமடைந் துள்ள நிலையில் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

30 வருட கால யுத்தத்தின் போது இஸ்ரேல் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. விடு தலை புலிகள் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் வெட்டிக் கொலை செய்யும் போது புலிக ளுக்கு எதிராக அமெரிக்கா எவ்வித பிரேரணைகளையும் கொண்டு வரவில்லை. இதேபோல் இலங்கை இராணுவத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் பிரேரணைகளை கொண்டு வரவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பு அப்பாவி மக்களை கொலை செய்து கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நிறுத்தி அவர்களுடன் பேச்சில் ஈடுபட்டு, அரசியல் தீர்வு குறித்து ஆராயுமாறு அமெரிக்கா அழுத்தம் பிரயோகித்தது.

இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வெளி யக பொறிமுறை நீடித்தால் இலங் கையில் சுயாதீனத்துக்கு பாதிப்பு ஏற்படும். தமிழர்களுக்கு எதிரா கவே யுத்தம் நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் வடக்கு, கிழக்கில் தமிழீழத்தை நிறுவ முயற்சிக்கும் அடிப்படை வாத நோக்கம் வெற்றிப் பெறும் - என்றார். (ஐ)

# ரஷ்யாவில் போரிடும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர உதவி செய்வேன்

### உதயங்க வீரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 16

ரஷ்யா - உக்ரைனில் போரிடும் இலங்கையர்களை நாட்டுக்கு மீள அழைத்து வருவதற்காக மேற்கொள் ளப்படும் முயற்சிகளுக்கு உதவத் தயார் என ரஷ்யாவுக்கான இலங் கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள் ளார்.

இலங்கையர்கள் முதலில் வேலைவாய்ப்புக்காக புலம் பெயர்ந்து உக்ரைனுக்கு சென்றுள் ளனர். தற்போது இவர்கள் அங்கு போரிடுகின்றனர்.

இவர்கள் சட்டவிரோதமாகச் சென்றுள்ளனர் என அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். அரசாங் கத்தால் அவர்கள் எதிர்கொண் டுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியாததால் அவர்கள் சட்டவிரோதமாக சென்றுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் இலங்கைப் பிரஜைகள். அவர்களை அரசாங்கம் காப்பாற்ற வேண்டும்.

இவர்கள் இலங்கை அரசாங்கத் தின் அனுமதியுடன் புலம்பெயர்ந்தி ருந்தாலும் ரஷ்ய அரசாங்கத்தின் அனுமதியுடன் போரில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித் துள்ள உதயங்க வீரதுங்க, போரில் ஈடுபடுவதற்காக இவர்கள் ரஷ்ய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இது இவர்களை நாடு கடத்துவதை இலகுவாக்கும் எனவும் குறிப்பிட் டுள்ளார்.

நான் இராஜதந்திரியோ அல்லது தூதுவரோ இல்லை. ஆனால் இவர் களை நாட்டுக்குத் திருப்பி அழைத்து வர முடியும் எனவும் உதயங்க தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.